# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2009, செத்தெம்பர் மாதம் 3 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.கூட். 25/2008*

## லஸந்த அலகியவன்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

“லஸந்த அலகியவன்ன மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் மஹர, அத்தனகல்ல இடங்களில் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பத் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தில் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, “லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்” என எடுத்துக் காட்டப்படலாம்.

*லஸந்த அலகியவன்ன மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) லஸந்த அலகியவன்ன மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “லஸந்த அலகியவன்ன மன்றம்” என்ற

2-PL 004154 -1,050 (2009/07)

பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பது டன் அது, அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பது டன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது:-

(அ) பாடசாலைகளுக்கு உருப்படி ரீதியானதும் தரமானது மான உதவி மற்றும் ஊக்குவிப்புகளை வழங்குதலும் பாடசாலைச் சிறுவர்கள் தேவைப்படும் கல்வித் தகைமைகளை எய்துவதனை இயலச் செய்தலும் ;

(ஆ) வறிய பாடசாலைச் சிறுவர்களுக்கென விசேட சேவைகளை நடாத்துதலும் கல்விக்கென புலமைப் பரிசில், நூலக வசதிகள் மற்றும் வேறு அவசியமான ஆதரவு மூலமாக உதவிகளை முனைவு செய்தல் ;

(இ) மாணவர்களை பகிரங்க மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்வதற்கு மாணவர்களுக்கு உதவுவதற்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுப்புக்களையும் ஒழுங்கு செய்தல் ;

(ஈ) கல்விசார்ந்த விடயங்களில் செயலமர்வுகளையும் உரையாடல்களையும் கருத்தரங்குகளையும் நடத்துதல் ;

(உ) பாடசாலைச் சிறுவர்களின் பண்பாட்டுத் திறமைகளை வெளிக்காட்டுவதற்கும், மேம்படுத்துவதற்கும் பாராட்டு வதற்கும் ஏற்பாடு செய்தலும் திறமையுள்ள பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும் ;

(ஊ) விழுமியங்களையும் நன்னடத்தையையும் நடைமுறை நியதிகளின்படி போற்றும் சிறுவர்களின் தலைமுறை யொன்றைக் கட்டியெழுப்புவதற்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் ;

(எ) தஹாம் பாடசாலைகளினதும் முன்னிலைப் பாடசாலை களினதும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு செயலமர்வுகளையும் உரையாடல்களையும் கருத்தரங்கு களையும் நடத்துதலும் சட்டத்தால் அவ்வாறு தேவைப் படுத்தப்படின் இயைபான மாகாண கல்வி அதிகாரி களின் அங்கீகாரத்துடன் முதன்னிலைப் பாடசாலை களை அங்குரார்ப்பணம் செய்வதற்கு ஊக்குவிப்பு களை வழங்குதலும் ;

(ஏ) தலைமைத்துவ பண்புகளைக் கட்டியெழுப்புவதற்கு பாடசாலைச் சிறுவர்களுக்கு தலைமைத்துவ முகாம் களையும் செயலமர்வுகளையும் நடத்துதலும் நடைமுறை வாழ்க்கைக்கு அவர்களுக்கு வசதியளிப்பதற்கு அவசியமான தேர்ச்சிகளை வழங்குதலும் ;

(ஐ) உடல்நலம், சுகாதாரப் பழக்கவழக்கங்கள் என்பன தொடர்பான நிகழ்ச்சித் திட்டமொன்றின் ஊடாக உடல் ரீதியிலான ஆற்றல் கொண்ட பாடசாலைப் பிள்ளைக ளின் தலைமுறையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு நாட்டுப்பற்றை அபிவிருத்தி செய்யும் செயல்முறை நிகழ்ச்சித்திட்டத்தையும் விளையாட்டுத்துறை மற்றும் உடற்கல்விக்கான நிகழ்ச்சித்திட்டமொன்றையும் ஒழுங்குசெய்தல் ;

(ஒ) இலங்கையின் மரபுரிமையையும் சூழலையும் வனவளத்தையும் பாதுகாப்பதனை குறிக்கோளாகக் கொண்ட கல்விச் சுற்றுலாக்களையும் சிரமதானப் பணிகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்குசெய்தல் ;

(ஓ) சிரேஷ்ட பிரசைகளின் இயக்கங்களால் ஆற்றப்படும் தேவைகளுக்கு ஆதரவளித்தலும் ஊக்கமளித்தலும் ;

(ஔ) முறைசாரா கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் முதியோர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் முழு ஆதரவும் உதவியும் வழங்குதல் ;

(க) பாரம்பரிய மற்றும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கமத்தொழிற் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவித்தலும் அவர்கள் தமது அறிவை விரிவாக்குவதை இயலச்செய்வதற்கான பல்வேறு செயற்பாடுகளை நடத்துதலும் ;

(ங) "ரணவிரு"வுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதற் கென நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் உதவிபுரிதல் ;

(ச) வேலையற்ற இளைஞர் சமுதாயத்திற்கு சுயதொழில் வாய்ப்புகளையும் அவசியமான ஆதரவையும் பயிற்சி யையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

(ஞ) ஒத்த குறிக்கோள்கள் கொண்ட வேறு உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்திசைவாக்கம் செய்வதும் ஒருங்கிணைத்தலும் ;

(ட) குறைந்த வருமானமுள்ள பிரிவினருக்கு வீடமைப்புக் கருத்திட்டங்களைத் தயாரித்தலும் அவர்களது மேம்பாட்டிற்காக ஏற்பாடு செய்தலும் ;

(ண) அனைத்து மதங்களுக்குரிய மத வழிபாட்டிடங்களை அபிவிருத்தி செய்தல் ;

(த) தேவையிலுள்ள மக்கள் அவர்களது சுகாதார வசதிக ளைப் பெறுவதில் உதவிபுரிதல்;

(ந) கிராம அலுவலர்களின் பிரிவுகளில் தாபிக்கப்பட்ட சங்கங்களின் செயற்பாடுகளில் உதவிபுரிதல்; அத்துடன்

(ய) ஓய்வூதியர்களிற்கு உதவிபுரிதலும் அவர்களது நலனுக் காக செயற்படுதலும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான இச்சட்டத்தின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் கூட்டுத்தாபனமானது அத்தகைய நடைமுறைப்படுத்துதல் இனம், சாதி, மதம், மொழி, பால் அல்லது அரசியல் கருத்து அடிப்படையிலான வேறுபாடின்றி கொண்டுநடாத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தினதும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளினதும் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், மன்றத்தின் தாபக உறுப்பினரான கௌரவ லஸந்த அலகியவன்ன பணிப்பாளர் சபையின் ஆயுட்கால தவிசாளராதல் வேண்டுமென்பதுடன் அதன்பின்னர் தவிசாளராக பதவி வகித்துக் கொண்டிருந்த ஆளின் மூத்த பிள்ளை பணிப்பாளர் சபையின் அடுத்த தவிசாளராக வருதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்த மன்றத்தின் நிருவாக சபை உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் இறப்பினால் அல்லது பதவி விலகலினால் முன்னதாக தமது பதவியை வெற்றிடமாக்கினாலொழிய, தமது தேர்தல் திகதியிலிருந்து நான்கு ஆண்டுகள் முடிவடையும் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர் தனது காலப்பகுதியின் காலாவதிக்கு முன்னதாக தனது பதவியை வெற்றிடமாக்கினால் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்படும் அவரது அடுத்துறுபவர் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலத்திற்கு மட்டும் பதவி வகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எத்தன்மையதுமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தத்துவங்களுள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல், முடிவுறுத்துதல், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுதல் அல்லது திரட்டுதல், அதன் நிதிகளை முதலீடு செய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஈடுபடுத்துதல், தொழிலுக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் என்பவற்றிற்கான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்குமான இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலுக்கும் நடாத்துதலுக்குமென அவதானிக்கப்படவேண்டிய நடைமுறை, கூட்டநடப்பெண் மற்றும் அவர்களின் தத்துவங்கள், கடமைகளின் பிரயோகமும் புரிதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் நியமனங்கள், தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினதும் பணிப்பாளர் சபையினதும் உறுப்பினரொருவராக வருவதற்குத் தேவைப்படும் தகைமைகள் ;

(உ) பணிப்பாளர் சபையின் தேர்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப் போன்று அதே போன்ற கூட்டத்தில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படவுள்ள தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்படவுள்ள தனிசுகளும்.*

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**8**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் அன்பளிப்பு, மரணசாதன ஆதனக் கையளிப்பு, அறுதிமாற்றம், நன்கொடைகள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார்ந்த முதலீடு என்ற வகையில் இதற்கு முன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அதனால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**9**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமா னது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, கொடுத்துமாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித் தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.*

**10**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினர்களிடமிருந்து வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11**. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு நேர்முன்னர் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது,-

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**13**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் செயலாளரினதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்